# G

Reg. No. | | | | | | | |

## II^th – காலாண்டுத் தேர்வு - 2018

நேரம் : 2.30 மணி மதிப்பெண்கள் : 90

## பொதுத்தமிழ்

அறிவுரைகள் : 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும். 2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : 1) விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.
2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

### பகுதி – அ (செய்யுள் உரைநடை)

**I. பலவுள தெரிக (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக)** **6 x 1 = 6**

1. பொருத்தமானவற்றை தேர்ந்தெடுக்க.
அ) அ. முத்துலிங்கம் – யுகத்தின் பாடல்
ஆ) பவணந்தி முனிவர் – நன்னூல்
இ) சு. வில்வரத்தினம் – ஆறாம் திணை
ஈ) இந்திரன் – பேச்சு மொழியும் எழுத்து மொழியும்
1) அ, ஆ 2) அ, ஈ 3) ஆ, ஈ 4) அ, இ
2. யானையைக் குறிக்கும் வேறு சொல் அ) குஞ்சரம் ஆ) குஞ்சனம் இ) அஞ்சுகம் ஈ) அஞ்சனம்
3. மண்ணுக்கு வளம் சேர்ப்பன அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
4. வாய்க்காலின் மதகுகளிடையே கட்டப்பட்ட சங்கிலியில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த பறவை
அ) நாரை ஆ) உள்ளான் இ) காகம் ஈ) கொக்கு
5. குறும்பர் மொழியில் தாழ்வாரத்தைக் குறிக்கும் சொல் அ) மலய ஆ) மேடு இ) மொட்டு ஈ) பள்ளம்
6. மூளைக்கு ஒரு நிமிடத்திற்கு எவ்வளவு குருதி தேவைப்படுகிறது. அ) 800 ஆ) 820 இ) 700 ஈ) 720

**II. அ) குறுவினா (எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக).** **3 x 2 = 6**

7. மருந்து மரமாக இருப்பவர் யார்? மருந்து எது?
8. இனம், மொழி குறித்த இரசூல்கம் சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
9. வளரும் <u>காவில் முகில் தொகை ஏறும்</u> – பொன் மாடம் எங்கும் அகிற்புகை நாறும் – அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?
10. தமிழர்கள் புகழ், பழியை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

**ஆ) குறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக).** **2 x 2 = 4**

11. பேச்சு மொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது. ஏன்?
12. மதிப்புக் கூட்டுப் பொருள் என்றால் என்ன?
13. மனிதனுக்கு உண்டான தனிப்பட்ட திறமையாக நோம் சோம்ஸ்கி எதனைக் கூறுகிறார்?

**III. அ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக).** **2 x 4 = 8**

14. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்படுகிறது?
15. "சலச வாவியில் செங்கயல்பாயும்" இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக?
16. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான இரண்டு குறட்பாக்களைக் குறிப்பிடுக.

**ஆ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக).** **2 x 4 = 8**

17. இடப்பக்க மூளையின் செய்திகள் பதிவதால் ஏற்படும் நன்மைகள் யாவை?
18. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் – குறிப்பு வரைக.
19. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?

**IV. அ) நெடுவினா (இருபது வரிகளில் விடை தருக).** **2 x 6 = 12**

20. பாதசாரிகளின் வழி நடைப் பாடலாகக் காவடிச் சிந்து உள்ளது – இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல் வழி மதிப்பீடு செய்க. **(அல்லது)**
தலைவியின் இல்லறப்பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் யற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?
21. அறிவியல் கருத்துகளைத் தமிழ மொழி வாயிலாக எளிதில் விளக்க இயலும் என்பதைத் 'தலைமைச் செயலகம்' என்னும் பாடம் வழி நிறுவுக. **(அல்லது)** நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக் அறியலாகும் செய்தியினைத் தொகுத்தெழுதுக.

**ஆ) அடிபிறழாமல் எழுதுக.** **4 + 2 = 6**

22. அ) "அம்மவாழி" .............எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல் ஆ) "நன்று" என முடியும் திருக்குறள்.

### பகுதி – ஆ (இலக்கணம், துணைப்பாடம், மொழிப்பயிற்சி)

**V. பலவுள் தெரிக (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக)** **8 x 1 = 8**

23. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம் ஆ) பகுதி, இடைநிலை, சாரியை
இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, விகுதி
24. 'வாடிவாசல்' என்னும் சிறுகதையின் ஆசிரியர் அ) ஜெயமோகன் ஆ) டிசி.சு. செல்லப்பா இ) அ. முத்துலிங்கம் ஈ) இந்திரன்
25. "திருப்புகழ்" இச்சொல்லில் புணர்ந்து வரும் புணர்ச்சி விதி
அ) உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.
இ) இயல்பினும் விதியினும்நின்ற உயிர் முன் கசதப மிகும் ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்
26. Plastic – என்னும் சொல்லிற்குரிய தமிழ்ச் சொல்லைத் தேர்க. அ) வழுவழுப்பு ஆ) நெகிழி இ) நெளிவு ஈ) வழலை
27. பொருந்தாத இணையைக் கண்டறிக.

சிறுகதை கதைமாந்தர்

அ) ஆறாம் திணை - பீரிஸ்

ஆ) வாடி வாசல் - பிச்சி

இ) பாலை டாக்டர் - டாக்டர். கே

ஈ) இனிக்கும் இன்சுலின் - டாக்டர். அம்பேத்கார்

28. WHO என்பதன் தமிழ்விரிவாக்கம்

அ) உலக வர்த்தக மையம் ஆ) உலக நல நிறுவனம் இ) உலக வணிக அமைப்பு ஈ) உலகப் பொருளாதார மன்றம்

29. பெருங்கடல் என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சி விதிகளைத் தேர்வு செய்க.

அ) ஈறுபோதல் தன்னொற்றிரட்டல் ஆ) ஈறுபோதல், இனமிகல் இ) ஈறுபோதல், ஆதிநீடல் ஈ) ஈறுபோதல், இனையவும்

30. "நன்று நன்று" - சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ) இரட்டைக்கிளவி ஆ) அடுக்குத்தொடர் இ) உரிச்சொற்றொடர் ஈ) வினையெச்சம்

VI. குறுவினா (எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடை தருக). 7 x 2 = 14

31. ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக. அ) முனிவிலர் ஆ) சூழ்ந்த

32. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக. அ) தண்டுடை ஆ) புகழெனின்

33. பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துக. அ) விசா ஆ) போலீஸ்

34. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

அ) அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.

ஆ) தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

35. பொருத்துக.

அ) அடி அகரம் ஐ ஆதல் - செங்கதிர்

ஆ) முன் நின்ற மெய்திரிதல் - பெருங்கொடை

இ) ஆதி நீடல் - பைங்கூழ்

ஈ) இனமிகல் - காரிருள்

36. பகுதி, விகுதி இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக. "CTEN"




37. மெய்ம் மயக்கச் சொற்களை வகைப்படுத்துக.

சோர்தல் வாய்க்கால், வாழ்க, வாழ்ந்த, பாக்கம், நார்ச்சத்து எச்சம், மார்கழி ஆழ்தல் மொத்தம் கப்பல் தாழ்ச்சி

38. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்கு படுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.

ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்

39. மரபுப் பிழையை நீக்கி எழுதுக.

அ) கரும்புத் தோப்புக்குள் சென்றேன் ஆ) பனை இலையால் விசிறி செய்தனர்

VII. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. (மொழித்திறன் பயிற்சிகள்) 3 x 4 = 12

40. வேற்றுமை அணி (அல்லது) உவமை அணியைச் சான்றுடன் விளக்குக?

41. தமிழாக்கம் தருக.

அ) The pen is mightier than the sword.

ஆ) Education is the most powerful weapon, which you can use to change the world.

இ) Work more talk less.

ஈ) Delay is dangerous.

42. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி ஏற்புடைய நயங்கள் மூன்றினை எடுத்து எழுதுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதமை பற்றிடும் காணீர்.

– பாரதியார்

43. பின்வரும் பத்தியைப் படித்துணர்ந்து வினாக்களுக்கேற்ற விடை தருக.

இயல், இசை, நாடகம் என மூவகையில் அமையும் முத்தமிழில் கடைசியாக அமைவது நாடகம் நாடகத்தைப் "பாமர மக்களின் பல்கலைக்கழகம்" என்பர். நாடக வேந்தர் டி.கே. சண்முகம் அவர்கள், பார்த்தும் கேட்டும் மகிழத்தக்கது நாடகம் என்பார். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்தைக் கூத்து என்றும் நடிகர்களைக் கூத்தாடி என்றும் அழைத்தனர். சங்க இலக்கிய ஆற்றுப்படை நூல்களுள் கூத்தராற்றுப்படையும் ஒன்றாகும். மேலும் திருக்குறள் "கூத்தாட்டவைக் குழாத்தற்றே" என நாடகம் நடைபெறும் இடத்தைக் கூத்தாட்டவை என்றே குறிப்பிடுகிறது.

வினாக்கள் : 1. முத்தமிழ் யாது? 2. நாடக வேந்தர் என்று அழைக்கப்பட்டவர் யார்?

3. நாடக அமைப்பு முறையை முதலில் கூறிய நூல் எது? 4. நாடக அரங்கைத் திருக்குறள் எப்பெயரால் சுட்டுகிறது?

VIII. பின்வரும் துணைப்பாடப் பகுதி வினாவிற்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக. 1 x 6 = 6

44. தமிழர் வாழ்வோடும் புலம் பெயர் நிகழ்வுகளோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது? (அல்லது) வாடி வாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.